31st March 1965]

தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதை அவர்கள் கண்டு பிடிப்பார்கள். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த மட்டில் எவ்வளவு இடத்திற்கு அதை விஸ்தரிக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதைப் போலவே மத்திய அரசாங்கத்தில் இருந்து எக்ஸ்ப்ளோரேடரி டியூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் என்ற அமைப்பு ஜியலாஜிகல் சர்வே அடிப் படையில் தமிழ்நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் ஆராய்ச்சி செய்து வருகிறது. இராமநாதபுரத்திலும், தஞ்சை ஜில்லாவிலும் ஊற்று நீர், பல நூறு அடிகளுக்குக் கீழ் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து ஒரு அறிக்கை தயார் செய்திருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : விவசாயிகள் ஊக்கமாக இதையெல்லாம் கவனித்துக் கொள்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் விவசாயிகளுக்கு இன்னும் கொஞ்சம் ஊக்கம் அதிகமாகக் கொடுப்பதற்கு போரிங் செட்களைப் பயன் படுத்தி ஆங்காங்கு அவர்களுக்குக் குறைந்த சார்ஜில் அதைச் செய்ய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : போரிங் செட்கள் வைப்பதற்குக் கூட ஊக்கம் அளித்து ஒத்தாசை உதவி செய்து வருகிறது.

Bug poison and pesticides

* 386 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to regulate the supply and use of bug-poison and pesticides?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. வை. சங்கரன் : மூட்டைப்பூச்சி மருந்துகள், மூட்டைப் பூச்சிகளைவிட மனிதர்களின் உயிர்களைத்தான் அதிகமாகக் குடித் துள்ளதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரிகளில் வந்துள்ள தற்கொலை கேஸ்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் பாதிக்கு மேல் மூட்டை பூச்சி மருந்தினால் உள்ளது. ஆகவே இந்த லெத்தல் டோஸ் குறைவாக இருக்கும்படி மூட்டைப் பூச்சி மருந்தைக் கட்டுப்படுத் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : மூட்டைப்பூச்சி மருந்தைக் கட்டுப் படுத்த ஏற்கெனவே அரசாங்கம் தக்க ஏற்பாடுகள் செய்திருக் கிறது. அதிகாரிகள் சென்று அந்த மருந்து விற்பனை செய்கிறவர் களிடம் பரிசோதனை செய்ய வேண்டும். விற்பவர்களும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் விற்க வேண்டும், சிறு குழந்தைகளுக்கு விற்கக்கூடாது என்றிருக்கிறது. வாங்குகிறவர் கள், அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் நிலை மையைத் தெரிந்துதான் செய்யவேண்டுமென்று விதிமுறைகள் எல்லாம் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் விற்க வேண்டும் என்பது கொஞ்சம் வேடிக்கையாக இருக்கிறது. 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்குத் தற்கொலை செய்து கொள்ள

வேண்டுமென்ற எண்ணம் கூட உதிக்க மாட்டாது. ஆகவே இதைச் செம்மையான முறையில் தீமையில்லாத முறையில் மூட்டைப் பூச்சியைக் கொல்லக்கூடியதாகவும், மனித உயிருக்குப் பாதகம் இல்லாத நிலையிலும், இந்த மருந்தைச் செம்மைப்படுத்தக் கூடிய ஒரு நெறியைக் கண்டு பிடிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பரிசீலனை செய்ய வேண்டும். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பதுபோல் இருக்கிறது. பரிசீலனை செய்துதான் பதில் சொல்ல முடியும்.

திரு. முனு. ஆதி : மூட்டைப் பூச்சி மருந்து வாங்க சில கட்டுப் பாடுகள் விதித்தால் நலம் என்று கருதுகிறோம். மது வகைகள் உபயோகிக்க டாக்டர் சர்டிபிக்கேட், மெடிக்கல் பிராஞ்ச் சர்டி பிகேட் வாங்குகிறார்கள். அதேபோல் பஞ்சாயத்து சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் சர்டிபிக்கேட் வாங்கினால்தான் இந்த பக் பாயி சன் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் கையாண்டு வரும் முறை தான் நல்ல முறை.

Manufacture and sale of "Arishtam"

* 387 *Q.*—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) whether it is a fact that most of the Pharmacists are engaged in the manufacture and sale of a sort of intoxicating liquor highly injurious to the public health by the name "Arishtam"; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆயுர்வேத மருத்துவர் என்று சொல்லிக் கொள்பவர்களே பெரும்பாலும் 'அரிஷ்டம்' தயாரித்து விற்று வருகிறார்கள். மருந்து கலக்குபவர்கள் (pharmacists) அல்ல.

(இ 'அரிஷ்டம்' உட்பட ஆயுர்வேத மருந்துகள் தயாரித்து விற்பது 1964-ம் ஆண்டு மருந்துப் பொருட்கள், வாசனைப் பண்டங்கள் (திருத்த) சட்டத்தின் (மத்திய சட்டம் 13/1964) மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் ஆயுர் வேத மருந்துப் பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பது குறித்த பல்வேறு ஷரத்துக்களை அமுல்படுத்தி விதிகள் இயற்றும் போது தான் 'அரிஷ்டம்' போன்ற போதை தரும் பானங்கள் தயாரிப்ப வர்கள் உட்பட, ஆயுர்வேத மருந்துப் பொருட்களைத் தயாரிப்ப வர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

SRI A. KUNJAN NADAR : Is the Hon. the Minister aware that there were three instantaneous deaths in P. V. S. Pharmacy at Thuckalai recently, due to taking this 'arishtam'?

THE HON. SRI P. KAKKAN : I have no such information.